# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 558/2004

Deposition of P**.W.-2** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 24.07.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பழனிவேலு Father's Name : குட்டியண்ணன்

துவக்க நேரம் : 12.37 P.M

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:

1. இந்த வழக்கை வாதிகள் எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தாவா கோவில்களை பொது கோவில்களாக அறிவிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளார்கள். தாவா கோவில்களில் எனது கட்டுப்பாட்டில் உள்ள கோவில்கள் எவைகள் என்றால் நாவக்குறிச்சி அருள்மிகு விநாயகர் திருக்கோவில், வைத்தியநாதர் சுவாமி திருக்கோவில், நயின பூர்வ பெருமாள் கோவில், அருள்மிகு கம்ப பெருமாள் திருக்கோவில், அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோவில் ஆகியவை ஆகும்.

2. அருள்மிகு கம்ப பெருமாள் திருக்கோவில் என்பது நயின பூர்வ பெருமாள் கோவிலில் உள்ள கல்கம்பத்தை குறிக்கும் என்றால் சரிதான். அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோவில் எங்கு உள்ளது என்று தெரியுமா என்றால் நான் பணியில் பொறுப்பேற்ற பொழுது மேற்படி கோவில் எங்கு உள்ளது என்று எனக்கு முன்பிருந்த அதிகாரி காண்பிக்கவில்லை, அதனால் அந்த கோவில் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோவில் என்பது ஆவணங்களின்படி நந்தவனம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

3. நாவக்குறிச்சியில் மலையம்மன் கோவில் பற்றி தெரியுமா என்றால் தெரியும். அது பெரிய கோவில் என்றாலும், கோவிலின் வடபுறம் பெரிய குளம் உள்ளது என்றாலும் சரிதான். மேற்படி கோவில் மற்றும் அதன் சுற்றியுள்ள கோவிலின் இடம் சுமார் 1 ஏக். இருக்குமா என்றால் இருக்கும். மலையம்மன் கோவில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லை என்று சொன்னால் சரிதான்.

4. நாவக்குறிச்சி கிராமத்தில் உள்ள கோவில்களில் தாவாவில் குறிப்பிட்டுள்ள கோவில்களை தவிர மற்ற கோவில்கள் எனது கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆறகளூர் செயல் அலுவலர் கட்டுப்பாட்டில் இருக்கும் கோவில்களை பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வடகரையான் (எ) முத்தையா கோவில் எனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதா என்றால் இல்லை. அந்த கோவில் எங்கு உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. வழக்கில் வாதிகள் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்ற விவரம் தெரியாது என்றாலும், எனக்கு எந்த விவரமும் தெரியாமல் வாதிகளின் பரிகாரம் பற்றி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள வாதியை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரிகிறதா என்றால் பார்த்தேன் தெரிகிறது.

6. இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து இன்றுவரை எனக்கு என்ன நடந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. கிருஷ்ணசாமி பண்டாரம், சின்னையா பண்டாரம் மற்றும் வாதிகள் தரப்பில் அசல் வழக்கு எண்.678/1987 என்ற வழக்கை நடத்தினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் எதிர் வாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

7. இவ்வழக்கின் 1-ஆம் வாதி அரசாங்கத்தின் பேரிலும், இந்து சமய அற நிலையத்துறை பேரிலும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் W.P.3826/2023 என்ற மனுவை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி மனுவில் அருள்மிகு விநாயகர்கோவில், மாரியம்மன் கோவில், பிடாரியம்மன் கோவில், அய்யனார்

சுவாமி கோவில், கம்ப பெருமாள் கோவில், எல்லைச்செட்டி கோவில், வைத்தீஸ்வரர் கோவில் மற்றும் வடகரையான் மலையம்மன் கோவில் ஆகிய கோவில்களின் நிலத்தின் ஆக்கிரமிப்பை அகற்ற கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மனுவில் வழங்கப்பட்ட உத்தரவின்படி மேற்படி கோவில்களில் 1 முதல் 7 வரை உள்ள கோவில்களின் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டதா என்றால் அதன் கோப்புகளை பார்த்தால்தான் என்னால் கூற முடியும்.

8. மேற்படி நீதிப்பேராணை மனு உத்தரவின் படி வடகரையான் மலையம்மன் கோவில் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் பிடாரி மலையம்மன் என்ற பெயரில் உள்ள நந்தவனத்தை இந்து சமய அறநிலையத்துறை சார்பில் பொது ஏலம் விடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் நீதிப்பேராணை உத்தரவில் பிடாரியம்மன் கோவில் 3-வதாகவும், வடகரையான் கோவில் 8-வதாகவும், மலையம்மன் கோவில் 9-வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. இவ்வழக்கின் 2-ஆம் பிரதிவாதி மாண்பமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் WP.14359/2023 என்ற மனுவை தாக்கல் செய்து மேற்படி மனுவில் வடகரையான் கோவிலுக்கு விழா நடத்த வேண்டும் என்ற உத்தரவை பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதன்படி கடந்த 2023-ஆம் ஆண்டு பிரதிவாதிகள் மேற்படி கோவில்களில் திருவிழா நடத்தினார்கள் என்றால் அப்பொழுது அங்கு நான் பணியில் சேரவில்லை என்பதால் அதுபற்றி தெரியவில்லை.

10. பிரதிவாதிகள் தரப்பை சேர்ந்த ஒரு செல்வராஜ் என்பவர் மாண்பமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் WP.15805/2023-ல் என்ற மனுவை தாக்கல் செய்து அதில் அருள்மிகு மலையம்மான் கோவில் மற்றும் முத்தையா சுவாமி கோவில் ஆகியவைகளுக்கு கரக பூஜை, ஊரணி பொங்கல் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்த உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

11. இவ்வழக்கின் 1-ஆம் வாதி மாண்பமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் WP.13638/2024 என்ற மனுவை பிரதிவாதிகள் மற்றும் அரசுக்கு எதிராக தாக்கல் செய்தார் என்றாலும், அதில் பிரதிவாதிகள் தரப்பில் மலையம்மன் மற்றும் வடகரையான்

கோவில்களுக்கு திருவிழா நடத்தும்பொழுது வாதிகள் கலந்து கொள்ள வேண்டுமென இடைநிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அதன்படி பிரதிவாதிகள் தரப்பில் திருவிழா நடத்தப்பட்டது என்றால் சரிதான். அந்த திருவிழாவில் வாதிகள் கலந்து கொண்டார்களா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி திருவிழாவில் வாதிகள் தரப்பில் கலந்து கொள்ளவில்லை என்பதால் அந்த ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

12. மேற்படி ரிட் மனுவிற்கு இந்து சமய அறநிலைய சேலம் இணை ஆணையர் அவர்கள் பதிலுரை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். பொதுவாக இணை ஆணையர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டிய வழக்குகளில் செயல் அலுவலர்கள்தான் ஆவணங்களுடன் உயர்நீதிமன்ற வழக்கறிஞரை சந்திப்பார்கள் என்றால் சரிதான்.

13. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது மேற்படி ரிட் மனுவிற்கு சரக ஆய்வாளர், இந்து சமய அறநிலையத்துறை, ஆத்தூர் அவர்கள் உயர்நீதிமன்ற அறநிலையத்துறை சிறப்பு அரசு வழக்கறிஞரிடம் கொடுத்த பத்திவாரி அறிக்கை என்றால் சரிதான். மேற்படி அறிக்கையில் எல்லைசெட்டி கோவில், மலையம்மன் திருக்கோவில் ஆகிய கோவில்கள் துறை கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படாத கோவில்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14. மேற்படி ரிட் மனுவில் மனுவில் குறிப்பிடப்பட்ட கோவில்களில் 3 கோவில்கள் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லையென குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மனுவின்படி 1 முதல் 5 மற்றும் 7 கோவில்கள் மட்டுமே துறைக்கட்டுப்பாட்டில் உள்ள கோவில்கள் என்றும், மீதமுள்ள 6, 8, 9 கோவில்களான எல்லைச்செட்டி கோவில், வடகரையான் கோவில், அருள்மிகு மலையம்மன் கோவில் ஆகியவை துறைக்கட்டுப்பாட்டில் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

15. இவ்வழக்கின் 1-ஆம் வாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் WP.19731/2025 என்ற மனுவை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி ரிட் மனுவில் இந்த வழக்கின் வாதிகளான மனுதாரர்கள் இந்த வழக்கின்

பிரதிவாதிகள்தான் வடகரையான் (எ) முத்தையா கோவிலின் திருவிழாக்களை நடத்துகிறார்கள் என்றும், அதற்குண்டான பணத்தை எங்கள் சமூகத்திடம் வசூல் செய்வதில்லை என்றும் கூறிதான் மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ரிட் மனுவில் ஆத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண். 678/1987-னை குறிப்பிட்டு காண்பித்து மேற்படி அசல் வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ரிட் மனு உத்தரவின் படி பிரதிவாதிகள் நடத்தும் திருவிழாவில் வாதிகள் கலந்து கொள்ளவேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி வாதிகள் திருவிழாவில் கலந்து கொண்டார்களா என்றால் எனக்கு தெரியவில்லை.

16. மேற்படி ரிட் மனுவில் 3, 4 எதிர்மனுதாரர்களான எங்களுக்கும், தலைவாசல் வட்டாட்சியர் அவர்களுக்கும் மனுவில் குறிப்பிட்டுள்ள கோவில்களில் பிரதிவாதிகள் திருவிழா நடத்தும்பொழுது மேற்பார்வை செய்யவேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி 28.05.2025 மற்றும் 30.05.2025 அன்ற நடைபெற்ற திருவிழாவினை மேற்பார்வையிட நான் சென்றேனா என்றால் இல்லை, அன்றைய தினம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மட்டும் சென்றேன். மேற்படி தினங்களில் நடைபெற்ற திருவிழாவில் வாதி தரப்பில் கலந்து கொண்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் திருவிழா நடத்தினார்கள் என்றால் சரிதான்.

17. மேற்படி ரிட் மனுவில் உள்ள மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நான் மதிக்கவில்லை என்றால் சரியல்ல, அன்றைய தினம் நான் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன், வட்டாட்சியரும் காவல் துறையினரை அழைத்து பேசினார். வட்டாட்சியர் திருவிழா நடத்துபவர்களுக்கு தகவல் தெரிவித்த பின் கோவில்களுக்கு செல்லலாம் என்று கூறிவிட்டார்.

18. வடகரையான் கோவில், மலையம்மன் கோவில் திருவிழா மற்றும் கும்பாபிஷேகத்திற்கு எங்கள் அலுவலகத்திலிருந்து நிதி ஒதுக்கப்படுவதில்லை என்றால் சரிதான். மேற்படி கோவில்கள் எங்களது கட்டுப்பாட்டின் கீழ் இல்லை. எங்கள் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களின் திருவிழாக்களை யார் நடத்துவார்கள் என்றால்

எங்கள் துறையும், கோவிலின் கட்டளைத்தாரர்களும் இணைந்து நடத்துவார்கள்.

19. என்னிடம் காட்டப்படும் வடசென்னிமலை அருள்மிகு பாலசுப்ரமணிய திருக்கோவில் 2025-ஆம் ஆண்டு வருடாந்திர திருவிழாவிற்காக எங்கள் அலுவலகத்திலிருந்து எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது என்றால் ரூ.8 லட்சம் ஒதுக்கப்பட்டது. மேற்படி கோவிலின் பங்குனி உத்திர திருவிழாவிற்கு நாங்கள் கொடுத்த நிதியை தவிர மேலும் ரூ.50 முதல் 60 லட்சம் வரை செலவிடப்பட்டிருக்கும் என்றால் இருக்கும். மேற்படி கோவிலின் பங்குனி உத்திர திருவிழாவிற்கு அச்சிடப்பட்ட அழைப்பிதழில் கொடியேற்றம் கட்டளைத்தாரர்கள், கரைக்காரர்கள் மற்றும் ஊர்பொதுமக்கள் முன்னிலையில் நடைபெறவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ள ராஜசேகரன், அழகப்பன், கண்ணைய நாயுடு, தங்கவேல் படையாட்சி, செல்வம், மகேந்திரன் ஐயர் ஆகியோர்கள் கரைக்காரர்கள் என்றால் சரிதான்.

20. மேற்படி 6 நபர்களும் விழா நாட்களில் நடக்கக்கூடிய அனைத்து நிகழ்வுகளையும் கலந்து கொள்வார்கள் என்றால் ஒரு சில நிகழ்வுகளில் நடந்து கொள்வார்கள். மேற்படி திருவிழாவின்பொழுது மேற்படி நபர்களின் பூஜைத்தட்டுகள் வைத்து சிறப்பு ஆராதனை செய்த பின்னர்தான் தேர் வடம் இழுக்க ஆரம்பிக்கப்படும் என்றால் சரிதான். எங்கள் துறை கட்டுப்பாட்டில் இல்லாத கோவில்களுக்கு பொதுவாக கரைக்காரர்களும், ஊர்பொதுமக்களும் சேர்ந்து திருவிழாக்கள் நடத்துவதுதான் வழக்கம் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 02.10 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-D. Jansi Rani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.558/2004, Dt.24.07.2025.